**தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகம் - 2023**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

1.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமாகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொள்ளப்பட்டது.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள்

அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5. நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடன் தொடர்புடைய இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 20 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்திற்குச் சொந்தமான 06 ஆக்கஉரிமைகளின் பெறுமதி மதிப்பீடு செய்து கற்பசைன் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் விஞ்ஞானிகள் மற்றும் புத்தாகுனர்கள் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுடன் கூடிய குழு ஒன்றின் மூலம் ஆக்க உரிமை பத்திரங்கள் மதிப்பீடு செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிறுவனத்தின் விஞ்ஞானிகள் மற்றும் புத்தாகுனர்கள் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுடன் கூடிய குழு ஒன்றின் மூலம் ஆக்க உரிமை பத்திரங்கள் மதிப்பீடு செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் ஹந்தான பத்தன தோட்டத்தின் பதிவு குத்தகை உரித்தினை இதுவரை நிறுவனத்திற்கு அனுப்ப நடவடிக்கை | நிறுவனத்தின் சொத்துக்கள் சரியாக இனம் காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | எடுக்கவில்லை என்பதாக | |
| (ஆ) | நிலையான சொத்துக்கணக்கில் இருந்து அகற்றப்பட்ட தேறிய பெறுமதி ரூபா 2,723,251 ஆன சேதமடைந்த, பயன்படுத்த முடியாத, மற்றும் கண்டுபிடிக்க முடியாத சொத்துக்கள் பதிவழித்தல் அல்லது அறவிடப்படும் வரை சொத்துக்களின் காண்பிப்பதற்கு பதிலாக சொத்துகளுக்குரிய ரூபா 10,996,955 மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்தின் இருந்து மேற்படி பெறுமதி கழிக்கப்பட்டு ரூபா 8,273,704 ஆன நிலையான சொத்துக்களில் தேடிய பெறுமதியாக நடைமுறை அல்லா சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த மீள் மதிப்பு ஒதுக்கீட்டிலிருந்து அகற்றப்படாமல் நிறுவனத்தின் கணக்கீட்டிக் கொள்கையின் பிரகாரம் சொத்துக்களை அகற்றும் சந்தர்ப்பத்தில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்வதாக | ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கு தத்துவங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டின் காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டு செயற்பாடுகளின் கீழ் ரூபா 2,942,550 ஆண்டு நிலுவைச் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் ரூபா 2,859,212 என காண்பிக்கப்பட்ட காரணத்தினால் காசு காய்ச்சல் கூற்றில் ரூபா 83,338 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. குறித்த கோவைகளை கணகாய்விகு சமர்ப்பிப்பததாக | இவ்வேறுபாட்டை எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கு தத்துவங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**1.5.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| விடயம் | தொகை (ரூபா) | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| ஆராய்ச்சி செயற்திட்டங்கள் | 100,040,521 | உடன்படிக்கை கோவைகள் மற்றும் ஏனைய பதிவேடுகள் | உரிய கோவைகளை கணக்காய்விற்காக சமர்ப்பிப்தாக | கணக்காய்விற்கு குறித்த தகவல்களை சமர்ப்பித்தல் வேண்டும் |

**1.6 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சுற்றறிக்கைகள்**<br>------------------------ | | | |
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகளின் சுற்றறிக்கையின் 9.12 ஆம் பந்தி | பொது முயற்சிகள் திணைக்களத்தினதும் பொது திறைசேரியினதும் அங்கீகாரமின்றி 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் | பொது முயற்சிகள் திணைக்களத்தினதும் பொது திறைசேரியினும் அங்கீகாரம் | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டு வரையான காலப்பகுதியில் நிறுவனத்தின் பங்களிப்பாக ரூபா 6,582,112 தொகை ஊழியர் அக்ரஹார காப்புறுதி நிதியத்திற்கும் மீளாய்வாண்டிற்காக ரூபா 4,300,820 தொகை ஊழியர்களின் தேனீர் உபசரிப்பு செலவினமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | வெவ்வேறாக பெற்றுக்கொள்ளப்படவில்லையெனவும் ஆண்டின் பாதீட்டில் அத்தொகை உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் | வேண்டும் |
| (ஆ) 2021 நவம்பர் 16 ஆந் திகதிய PE 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகளின் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்தி | நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் நிறுவகத்தின் கணக்காய்வு அறிக்கையுடன் முன்னைய ஆண்டின் செயலாற்றல் உள்ளடக்கப்பட்ட ஆண்டறிக்கை மும்மொழிகளில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கை இது வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு குறித்த திருத்தங்களை மேற்கொண்டு அமைச்சிறற்கு தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**
**நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 4,242,947 மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 38,707,333 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 42,950,280 ஆன அதிகரிப்பொன்றைக் காண்பித்தது. இவ்வதிகரிப்பிற்கு மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்கள் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**
**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்திற்கு சொந்தமான ஊழியர் சேமலாப நிதியத்திற்குரிய 20 நிலையான வைப்புக் கணக்கு களுக்குரிய ரூபா 201,880,632 ஆன காலம் முதிர்ச்சியடைந்திருந்த முதலீடு ஒன்றை மீளாய்வாண்டில் மீண்டும் விலை கோரி முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமல் மீண்டும் வங்கியில் முதலீடு செய்யப்பட்டிருந்தது | காணப்பட்ட பொருளாதார சிக்கல் எதிரே வட்டி சதவீதம் ஒரே அளவில் அதிகரித்ததால் நிறுவனத்திற்கு முறையான விலைகோரல் மேற்கொண்டு அதனை மேற்கொள்வதற்கு காலம் தாழ்த்தப்படுவதால் வாய்மொழி மூலம் விலை விலைகோரப்பட்டு சிறந்து மாற்று | நிதியத்தினை செயற்திறனன நலன்கள் கிடைக்கும் வகையில் முதலீடு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | வழியில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக | |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய காணியொன்று 02 ஆண்டு காலப்பகுதியில் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டு அதற்காக ரூபா 1,496,000 கொடுப்பணம் செய்யப்பட்டிருந்த போதும் அக்காணியை நீ நோக்கத்திற்கு உட்படுத்த செயற்பாடுகளுக்காக பயன்படுத்தாமல் விளைவற்று காணப்பட்டது. | 2024 ஆம் ஆண்டின் போது ஆராய்ச்சி செயல் திட்டங்களை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளதாக | எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய வகையில் ஆகக்கூடிய இயலளவுடன் சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டு அங்கீகரிக்கப்பட்ட பெறுகை திட்டத்திற்கு புறம்பாக மற்றும் அங்கீகாரம் ஒன்றில்லாமல் ரூபா 14,350,305 தொகையான 07 பெறுகை செயறபாடுகள் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டு இருந்தன. | சுற்றாடல் அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் தம்புள்ள மர பூங்காவில் செயற்படுத்தப்பட்டிருந்த 7 செயற்திட்டங்களை விரைவில் பூர்த்தி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதால் பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை என்பதாக | அங்கீகரிக்கப்பட்ட பெறுகை திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.3 நிதிய குறைப் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தின் ஆரம்பத்திலிருந்து இதுவரை 6 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்குரியதாக கிடைத்திருந்த 06 ஆக்கஉரிமை பத்திரங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விற்பனை செய்வதற்கோ அல்லது வேறு வகையில் பயன்படுத்தவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது சுழற்சியில் காணப்படும் ஆக்கஉரிமை பத்திரங்களுக்காக பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக | ஆக்கஉரிமை அனுமதி பத்திரங்களை உயர் அளவில் பயன்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது ஆராய்ச்சி மானியங்களுக்குரிய ரூபா 1,333,984 ஆன நிதியம் மீளாய் வாண்டில் பயன்படுத்தப் படாமல் விளைவற்று காணப்பட்டது. | 2024 ஆம் ஆண்டில் 03 செயற்திட்டங்களின் நிதியத்தை பயன்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய பணத்தை ஆராய்ச்சி நித்தியத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுப்பதாக | நிதியத்திற்குரிய செயற்பாடுகளுக்காக செயற்தினாக பயன்படுத்த வேண்டும். |